# வலயக்கல்வி அலுவலகம் - வரமராட்சி
## மாதிரி வினாத்தாள் – 2020
**தரம் -13 பகுதி II புவியியல்**

**அறிவுறுத்தல்கள்|:** ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

**பகுதி 1 பௌதிகப்புவியியல்**

1.

**i.** மண் எவ்வாறு உருவாகின்றது? (2 புள்ளிகள்)

**ii.** மண்ணுருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் நான்கினைக் குறிப்பிட்டு மூன்றினை விளக்குக? (6 புள்ளிகள்)

**iii.** முதிர்ச்சியடைந்த மண்ணின் குறுக்குவெட்டு முகத்தினை வரைந்து, அதன் பண்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக? (6 புள்ளிகள்)

**iv.** இலங்கையின் உலர்வலயத்தில் காணப்படும் மண்வகைகள் நான்கினைக் குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றின் பரம்பல் மற்றும் பண்புகள் தொடர்பாக ஆராய்க? (6 புள்ளிகள்)

2.

**i.** உலகில் காணப்படும் வெப்பப்பாலைவனங்கள் இரண்டினையும், அவை அமைந்துள்ள கண்டங்களையும் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

**ii.** காற்றின் அரித்தல் செயன்முறையினால் உருவாக்கப்படும் மூன்று நிலவுருவங்களை பொருத்தமான வரைபடங்களுடன் விபரிக்குக? (6 புள்ளிகள்)

**iii.** பாலைவனப்பிரதேசங்களில் நீரினால் உருவாக்கப்படும் நான்கு நிலவுருவங்களைப் பெயரிட்டு, அவற்றில் இரண்டின் உருவாக்கத்தினை விவரிக்குக? (6 புள்ளிகள்)

**iv.** உலகில் பாலைபரவுதல் அதிகரித்துச் செல்வதற்கான காரணங்கள் மூன்றினைப் பொருத்தமான உதாரணங்களுடன் பரிசீலிக்குக? (6 புள்ளிகள்)

3.

**i.** புவியின் கற்கோளத்தில் காணப்படும் புவியோட்டு விருத்திற்குரிய தகடுகள் நான்கினைப் பெயரிடுக? (2 புள்ளிகள்)

**ii.** உலகின் பிரதான புவிநடுக்க வலயங்களை உலகப்புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக? (6 புள்ளி)

**iii.** தகடுகள் அசைவுக்குட்படும் முறைகளைக் குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

**iv.** எரிமலை சார்ந்த தலையீட்டு நிலவுருவங்கள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

4.

**i.** இடர் மற்றும் அனர்த்தம் ஆகிய பதங்களை வேறுபடுத்துக? (2 புள்ளிகள்)

**ii.** உலகின் இயற்கை இடர்களை உதாரணத்துடன் பாகுபடுத்துக? (6 புள்ளிகள்)

**iii.** இடர்கள் மற்றும் அனர்த்தங்கள் அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் மானிடக் காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

**iv.** இயற்கை அனர்த்தம் ஒன்றினைத் தெரிவுசெய்து அனர்த்தமுகாமைத்துவ வட்ட செயன்முறைக்கேற்ப மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக? (6 புள்ளிகள்)

VadaZICTEC

## பகுதி 2 மானிடப்புவியியல்

5.

**i.** குடியிருப்புக்களின் அடிப்படை அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

**ii.** குடியிருப்பு வகைகளுக்கிடையிலான வேறுபாடுகளை நான்கு விடயங்களின் அடிப்படையில் ஒப்பீடு செய்க? (6 புள்ளிகள்)

**iii.** உலகக் குடியிருப்பின் பல்வேறு கோலங்களை விபரிக்குக? (6 புள்ளிகள்)

**iv.** குடியிருப்புக்களின் நவீன போக்குகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

6.

**i.** உலகில் காணப்படும் 10 மில்லியனுக்கு மேற்பட்ட நகரங்கள் ஐந்தினை குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

**ii.** நகராக்கமட்டம் உயர்வடைவதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

**iii.** அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காணப்படும் நகராக்கம் தொடர்பான பிரச்சினைகள் நான்கினைக் குறிப்பிட்டு, மூன்றினை விளக்குக? (6 புள்ளிகள்)

**iv.** இலங்கையில் நகரமயமாக்கத்துடன் தொடர்புடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக? (8 புள்ளிகள்)

7.

**i.** உலகின் கைத்தொழில்களை உற்பத்திச் செயன்முறையின் அடிப்படையில் வகைப்படுத்துக? (2 புள்ளிகள்)

**ii.** உலகில் நிலக்கரி பரம்பியுள்ள வலயங்கள் நான்கினைப் பெயரிடுக? (4 புள்ளிகள்)

**iii.** இலங்கையின் காரீய உற்பத்தியின் நவீன போக்குகள் நான்கினைக் குறிப்பிட்டு, மூன்றினை விளக்குக? (6 புள்ளிகள்)

**iv.** இலங்கையின் பிரதேச அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் கனியவளங்களால் சூழலுக்கு ஏற்படுத்தப்படும் பாதிப்புக்களை இழிவளவாக்குவதற்கான நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக? (8 புள்ளிகள்)

8.

**i.** இலங்கைச் சுற்றுலாசபையின் மூலம் பெயரிடப்பட்ட நான்கு சுற்றுலா வலயங்களை இலங்கை புறவுருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக? (4 புள்ளிகள்)

**ii.** இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதற்கான நோக்கங்கள் மூன்றினைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

**iii.** இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு சுற்றுலாக்கைத்தொழில் எவ்வாறு பங்களித்து வருகின்றது என்பதனை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக? (6 புள்ளிகள்)

**iv.** சுற்றுலாக்கைத்தொழில் விருத்திக்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக? (7 புள்ளிகள்)

VadaZICTEC